வேதாரண்யம் நகராட்சியின் 2018-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ம் நாள் திங்கட் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. என். ஆர். ரவிச்சந்திரன்,
தனி அலுவலர்.

**பொருள் எண்.1**

Biological Diversity தொடர்பான சட்டம்-2002 தமிழ்நாடு Biological Diversity Management Committee அமைப்பது தொடர்பான அரசாணை (நிலை) எண். 137 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (FR-5) நாள் : 09.11.2017 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். அரசாணையில் கண்டுள்ளவாறு இந்நகராட்சியில் Biological Diversity Management Committee அமைத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 142 அனுமதிக்கப்பட்டது.***

**பொருள் எண். 2**

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் சொத்துவரியினை நடப்பு அரையாண்டு முதல் சீராய்வு (Revision of Property tax) செய்திட தெரிவித்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண். 73, நாள்: 19.07.2018-ற்கு திருத்தம் வெளியிட்டு வரப்பெற்ற அரசாணை எண் 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் : 26.07.2018 பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்திடலாம்.

(1879/18/அ1)

***தீர்மான எண். 143 பதிவு செய்யப்பட்டது.***

# வேதாரண்யம் நகராட்சியின் 2018-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ம் நாள் வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. என். ஆர். ரவிச்சந்திரன்,
தனி அலுவலர்.

**பொருள் எண்.1**

வேதாரண்யம் நகராட்சி கடற்கரை பகுதியில் எதிர்வரும் 11.08.2018 அன்று சனிக்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று கடலில் புனிதநீராடும் விழா நடைபெற உள்ளதை முன்னிட்டு வருகை தரும் பொதுமக்களுக்கு தேவையான சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள், தெருவிளக்கு வசதிகள், தற்காலிக கழிப்பறைகள் மற்றும் தற்காலிக உடைமாற்றும் இடம் அமைத்திட வேண்டியது அவசியமாகிறது. இப்பணிக்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.50,000/- ஆகும். இச்செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1958/2018/E1)

***தீர்மான எண். 144 அனுமதிக்கப்பட்டது.***

**பொருள் எண். 2**

வேதாரண்யம் நகராட்சி ஆணையர் பயன்பாட்டில் உள்ள புதிய ஈப்பு வாகனம் எண். TN-51AH-8239-ஐ 3-வது சர்வீஸ் செய்திடும் பணி “M/S .சிவா ஆட்டோ மொபைல் லிட்., திருச்சி” நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வகையில் ரூ.6999/- (ரசீது எண்.CSC19A000173/ நாள்: 04.08.2018) செலவினம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையினை மேற்கண்ட நிறுவனத்திற்கு இவ்வலுவலக ஈப்பு ஓட்டுநர் திரு மு. துர்க்காசெல்வம் என்பவரால் தொகை வழங்கப்பட்டுள்ளது. எனவே இத்தொகையினை மேற்கண்ட ஓட்டுநர் திரு மு. துர்காசெல்வம் என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். இச்செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

(1870/18/E1)

***தீர்மான எண். 145 அனுமதிக்கப்பட்டது.***

**பொருள் எண். 3**

வேதாரண்யம் நகராட்சி பகுதிகளில் நடைபெறும் திட்டப்பணிகளை Online-ல் Upload செய்வதற்கு (E-tender) நகராட்சி பொறியாளர் மற்றும் பணி ஆய்வருக்கு Digital Signature card தேவைப்படுகிறது. இந்த இரண்டு அலுவலர்களுக்கும் (தலா ரூ.2600/- வீதம்) தனித்தனியே “Digital

Signature card, Digital Identity'', திருச்சி நிறுவனத்தின் மூலம் வாங்குதவற்கு ரூ.5200/- செலவினம் ஆகும். இச்செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 146 அனுமதிக்கப்பட்டது***

**பொருள் எண். 4**

வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, கைலவனம்பேட்டை தெற்குப்பகுதியில் சவுக்கு மரங்கள் இடையே செல்லும் தெருவிளக்கு மின்கம்பங்கள் இடமாற்றச்செய்திட கேட்பு அனுப்பிடக்கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1893/2017/இ1/நாள் : 27.10.2017-ன் படி அனுப்பப்பட்டதில், தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து இப்பணிக்காகும் மதிப்பீட்டு தொகை ரூ.62,290/-க்கான கேட்பு வரப்பெற்றுள்ளது. இத்தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 147 அனுமதிக்கப்பட்டது***

**பொருள் எண். 5**

வேதாரண்யம் நகராட்சி பகுதிக்குட்பட்ட அம்பேத்கர் காலனியில் சுகாதாரப்பணியாளர் குடியிருப்பு கட்டிடப்பணி நடைபெறுவதற்கு இடையூறாக உள்ள மின் கம்பங்கள் மற்றும் மின்பாதைகள் மாற்றியமைக்க இளமின்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், வேதாரண்யத்திடமிருந்து. வரப்பெற்ற க.எண்.இ.மி.பொ/இப/வேதை/கோ.DCW/எண்.184/நாள்: 24.08.2018-ன்படி கேட்புத்தொகை ரூ.10980/- செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினை தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 148 அனுமதிக்கப்பட்டது***

**பொருள் எண். 6**

வேதாரண்யம் நகராட்சி காந்திபூங்காவில் அமைந்துள்ள 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கடந்த பத்து வருடங்களுக்கு முன்பாக கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் இதுவரை பராமரிப்பு பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே பழுதடைந்த வால்வுகள் மாற்றுதல் வால்வு தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் பராமரித்தல் மற்றும் வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பராமரிப்பு பணிகள்

மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 149 அனுமதிக்கப்பட்டது***

**பொருள் எண். 7**

இந்நகராட்சியில் பம்ப் மெக்கானிக்காக பணிபுரிந்து 31.12.2011-ல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு எஸ். சிவசண்முகம் சேமநலநிதிக்கான வட்டி கோரி விண்ணப்பம் செய்துள்ளார். அவருக்கு சேமநலநிதிக்கான வட்டி வழங்கிட ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 2002-2003 முதல் 2011-2012 (டிசம்பர் 2011) வரை ரூ.73852/- வட்டி வழங்கப்பட வேண்டும். உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர், நாகப்பட்டினம் அவர்களின் ந.க.81/அ1/2014, நாள்: 10.02.14 கடிதத்தில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு சேமநலநிதி வட்டி தொகையினை நகராட்சி நிதியிலிருந்து வழங்கி பின்னர் வட்டி பெறப்பட்டதும் ஈடு செய்துகொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூ.73852-வருவாய் நிதியிலிருந்து சேமநலநிதிக்கு மாற்றம் செய்து வழங்கிடலாம். வட்டித்தொகை பெறப்பட்டதும் ஈடு செய்திடலாம்.

***தீர்மான எண். 150 அனுமதிக்கப்பட்டது***

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவுப்பணியாளர்கள், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள், பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர்கள் மற்றும் பொறியியல்பரிவு மின் பணியாளர்கள் மற்றும் பூங்கா காவலர்களுக்கு 2018-19 ம் ஆண்டிற்கான சீருடைகள் வழங்கிடவும், அதற்கான செலவினங்களுக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம்.

***தீர்மான எண். 151 ஒப்புதல் அளிக்கப்பட்டது.***

**பொருள் எண்.9**

நகராட்சி பொதுசுகாதார கழிவுநீர் வாகனம் எண். TN-51C-7951 ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொண்டபோது நகராட்சி கழிவுநீர் வாகனம் மேற்கொண்ட பணியினை 05.02.2018 முதல் 15.02.2018 வரை 11 நாட்கள் தனியார் கழிவுநீர் வாகனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட வகையில் நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.1000/- வீதம் 11 நாட்களுக்கு (11x1000) ரூ.11000/-ஐ உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு தொகை வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| விவரம் | G.R. நிவாஸ் செப்டிக் டேங்க் கிளினிங், வேதாரண்யம் | பிரியா செப்டிக் டேங்க் கிளினிங், வேதாரண்யம | மரியா செப்டிக் டேங்க் கிளினிங், வேதாரண்யம |
|---|---|---|---|
| நகராட்சி பகுதியில் உள்ள கழிவுநீரை 05.02.2018 முதல் 15.02.2018 வரை 11 நாட்களுக்கு தனியார் வாகனம் மூலம் அகற்றும் பணி | 1000/- | 1100/- | 1150/- |

அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணி மேற்கொள்ள 3 உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள G.R. நிவாஸ் செப்டிக் டேங்க் கிளினிங், வேதாரண்யம் என்ற நிறுவனம் மூலம் பணி மேற்கொண்ட அலுவலக நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

***தீர்மான எண். 152 அனுமதிக்கப்பட்டது.***

<u>**பொருள் எண்.10**</u>

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2018-19ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக்கோரிக்கை எண்.34 அறிவிப்பு எண்.14-ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதற்கிணங்க, வேதாரண்யம் நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத் தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம், 21 வார்டுகளில் ரூ.378.00 இலட்சம் (ரூபாய் முன்னூற்று எழுபத்தெட்டு இலட்சம்) ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகரில் உள்ளஅனைத்து வார்டுகளிலும், வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் 21 வார்டுகளிலும் செயல்படுத்தவும், இதற்கான அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அங்கிகரிக்கலாம்.

(ந.க.எண். 2132/2018 இ1)

***தீர்மான எண். 152 (அ)   அங்கீகரிக்கப்பட்டது.***

ஒம்/- என்.ஆர். ரவிச்சந்திரன்
ஆணையர்/தனிஅலுவலர்,
வேதாரண்யம் நகராட்சி.